2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 2/2020)*, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 2/2020)@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் என்பதன் பெயரை மாற்றி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மறைந்த அம்மையார் அவர்களின் பெயரைச் சூட்டுவதாக தெரிவித்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், இதில் மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. ஆனால் ஒரு செய்தியை இந்த அவைக்கு நான் சொல்லவேண்டியிருக்கிறது.* 1981–1982 *ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் டாக்டர் எம்.ஜி.ஆர்*

---

*@ **9–1–2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

[திரு. உ. மதிவாணன்] [2020 ஜனவரி 9

அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் எங்கள் திருவாரூர் அரசு கலைக் கல்லூரிக்கு தலைவர் கலைஞருடைய பெயர் இடம்பெற்றிருந்தது. ஆனால், அன்றைக்கு அந்தப் பெயரை மாற்றி, தலைவர் கலைஞருடைய பெயர் வந்துவிடக் கூடாதென்பதற்காக. திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி என்று பெயரை மாற்றினார்கள். நான் அதை ஒப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், எங்களைப் பொறுத்த வரையில், ஓர் அரசின் கொள்கை முடிவை என்றைக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகத்தான், இதுபோன்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகத் தான் இருக்கிறோம் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து,சட்டமுன்வடிவைப்பொறுத்தவரையில்,அரசினுடைய நிதி உதவி பெறக்கூடிய ஒரு பல்கலைக்கழகம் என்ற காரணத்தால், வேந்தருக்கும்துணைவேந்தருக்கும்உள்ள அதிகாரத்தைஅரசாங்கமே எடுத்துக்கொள்கிறது. ஒரு பல்கலைக்கழகம் என்கிறபோது தனி அதிகாரம், தனி முடிவெடுக்க வேண்டும். படிப்பிற்கான கல்வித் திட்டங்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக வேந்தரோ அல்லது துணை வேந்தரோ அவர்கள் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டியஅதிகாரத்தைத்தான்நீங்கள்கொடுக்கவேண்டுமேயொழிய நிதி ஒதுக்கீடு செய்த காரணத்தினால், வேந்தருக்கும் துணை வேந்தருக்கும் உள்ள அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சரியாக இருக்காது.

இன்னொன்று Selection Panel. ஒரு துணை வேந்தரைத் தேர்ந்தெடுப்பதற்கு, அரசாங்கத்தினுடைய பிரதிநிதி, Government Nominee ஒருவரை நீங்கள் நியமிப்பதாகச் சொல்கிறீர்கள். அவ்வாறு அரசாங்கம் ஒரு பிரதிநிதியை நியமிக்கிறபோது அவருடைய தகுதி என்னவாக இருக்க வேண்டும்? இன்றைக்கு நாகப்பட்டினத்தில் Fisheries University இருக்கிறது. அங்குள்ள நகரச் செயலாளரையோ ஒன்றியச் செயலாளரையோ பிரதிநிதியாக நீங்கள் நியமிக்கிறீர்கள் என்றால், அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய நிலை என்னவாக இருக்கும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தச் சட்டமானது, அரசாங்கத்தினுடைய பிரதிநிதி–ஒரு குழு அமைக்கிறோம் என்றால், Search Committee–ஐ விடுங்கள், Selection Committee–ஐ நியமிக்கும்போது, அதற்கென்று சில வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகளை மீறிவிடக் கூடாது என்பதற்காகதான் ஓர் அரசாங்கப் பிரதிநிதி நியமிக்கப்படக் கூடாது, இன்னொன்று, அதிகாரத்தைப் பொறுத்த அளவில், வேந்தருக்கும் துணை வேந்தருக்கும் உள்ள அதிகாரத்தை

2020 ஜனவரி 9] [திரு. உ. மதிவாணன்]

அரசாங்கமே எடுத்துக்கொண்டால், அது எந்த அளவிற்குச் செம்மையாக இருக்கும் என்பதை புரிந்துகொள்வதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தளவு இந்த திருத்தத்தை ஆரம்ப நிலையிலேயும், நிறைவேற்றுகிற நிலையிலேயும் எதிர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழகத்தைக் கொண்டுவந்தபோது, அப்போது மீன் வள பல்கலைக்கழகமாக அதன் பெயர் இருந்தது. 20-9-2017 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழகத்தின் பெயரானது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெயரில் இயங்கும் என்கின்ற அந்த அறிவிப்பினையடுத்து, ஓர் அரசாணை போடப்பட்டது. அந்த அரசாணைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது ஒன்று.*

இரண்டாவது, மீன் வள பல்கலைக்கழகத்தில், ஆய்வும், விசாரணையும் அரசு மேற்கொள்ளுதல். இது ஒன்றும் புதிது கிடையாது. இது ஏற்கெனவே Anna University*-ல் இருக்கிறது,* Tamil Nadu Open University Act*-ல் இருக்கிறது,* Annamalai University*-யிலும் இருக்கிறது. இது வழக்கமாக எல்லா* University*-களிலும் இருப்பதுதான்.* Tamilnadu Dr. J. Jayalalithaa Fisheries University*-யிலும் கொண்டுவந்துள்ளோம்.*

மூன்றாவது, Search Committee*-ல்* Government nominee *நியமனம் செய்யப்படுவது குறித்தது. இது எங்களுடைய* University*-க்கு மட்டும் பிரச்சினை கிடையாது. இதுவும்* Tamil Nadu Veterinary and Animal Sciences University Act, 1989, Periyar University Act, 1997, Annamalai University Act, 2013, *எல்லாப் பல்கலைக்கழகங்களிலும்* Search Committee*-க்கு அரசு சார்பில்*

[திரு. டி. ஜெயக்குமார்]

ஒரு nominee நியமிக்க வேண்டுமென்ற அந்த கோட்பாட்டை பின்பற்றிதான் மீன் வள பல்கலைக்கழகத்திற்கு, அம்மாவின் பெயரில் இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்கும் நடைமுறைப்படுத்துகிறோம்.

நான்காவதாக, துணை வேந்தரை நியமிப்பதற்கான கல்வித் தகுதிகளை வரையறைப்படுத்துவது குறித்தது. இது ஒன்றும் புதிது கிடையாது. இந்தப் பிரிவும் ஏற்கெனவே, எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இருக்கின்றது. குறிப்பாக, 3 பல்கலைக்கழகங்கங்களைச் சொல்கிறேன். Tamil Nadu Veterinary and Animal Sciences University Act, 1989, Periyar University Act, 1997 and Tamil Nadu Physical Education and Sports University Act, 2004 எல்லா University-யிலும் இருக்கிற வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றித்தான் மீன் வள பல்கலைக்கழகத்திலும் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. எனவே, இது ஒரு பெரிய விஷயமே இல்லை. இதை எதற்காக object செய்தீர்கள் என்று தெரியவில்லை. வேற்று கிரகத்திலிருந்து புதிய விஷயத்தை இங்கே நாங்கள் சேர்க்கவில்லை. அதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஒ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2020), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*